**செ.வெ. எண்:503** **நாள்: 03.08.2017**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தலைமைச் செயலகத்தில் 03.08.2017 அன்று போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலர் அவர்கள் தலைமையில் அனைத்து போக்குவரத்துக் கழகங்களுக்குமான மின்னணு பயணச்சீட்டு (Electronic Ticketing Machine) பயன்பாடு தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டது.

மேற்கண்ட ஆய்வின்போது, மின்னணு பயணச்சீட்டு திட்டம் செயல்படுத்தும் நிறுவனங்களான அனலாஜிக்ஸ்டெக் இந்திய நிறுவனம், மற்றும் இன்ஜெனரி டெக்னாலஜிஸ் சொல்யூசன்ஸ் பிரைவேட் லிமிடெட் ஆகியவற்றை சார்ந்த அலுவலர்கள் பங்கேற்று மின்னணு பயணச்சீட்டுத் திட்டம் தொடர்ந்து சிறப்புற நடைபெற மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளை தெளிவுப்படுத்தினர்.

தற்பொழுது பயன்பாட்டில் உள்ள மின்னணு பயணச்சீட்டு சாதனங்களை முழுவீச்சில் விரிவாக்கம் செய்து எதிர்வரும் 20.08.2017 முதல் மாநகர் போக்குவரத்துக் கழகம், சென்னையில் அனைத்து பேருந்துகளிலும் மின்னணு பயணச்சீட்டு முழு அளவில் பயணிகளுக்கு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதனால் நடத்துனர்கள் பயணச்சீட்டு வழங்கும் மற்றும் பயணிகள் பயணச்சீட்டு பெறும் நடைமுறை எளிதாகும்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**